# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.739/2018

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**:

நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்ய நான் தான் விவரம் சென்னேன். அதில் இறந்துபோனவர் பயணம் செய்த மோட்டார்சைக்கிளின் பதிவுஎண் பற்றி கூறியுள்ளேன். நான் சென்ற மோட்டார்சைக்கிளின் பதிவுஎண்ணை சொல்லவில்லை என்றால் சரிதான். திருச்சி – திண்டுக்கல் ரோடு போக்குவரத்து அதிமுள்ள ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தின் அருகில் U வளைவு இல்லை என்றால் சுமார் 100மீட்டர் தூரத்தில் இருந்தது. Uவளைவு அருகில் தான் பொதுவாக திரும்புவார்கள் என்றால் சரிதான். பேருந்து எந்த கோட்டத்தை சேர்ந்தது என்று நான் நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. காவல்நிலையத்தில் என்னிடம் வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கினார்கள். நான் மருத்துவமனைக்கு உடன் சென்றேன். லோகேஸ்வரன் விபத்து சமயத்தில்

மதுபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. இன்று சாட்சியம் அளிக்க ம.சா.1 தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். விபத்து நடக்கும்போது நான் சம்பவஇடத்தில் இல்லையென்றும், மனுதாரருக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.